# தூது

# போ

# தென்றலே!



ஜ. சிங்கராயர்

# தூது போ தென்றலே!

*மு. சிங்கராயர்*

வெளியீடு:
தமிழ்மதி
யாழ்ப்பாணம்

*IMPRIMATUR*

BISHOP'S HOUSE,
JAFFNA.
29. 11. 2000

***Rev. Fr. J. B. E. Selvarajah***
***Vicar General***

## BIBLIOGRAPHICAL DATA

TITLE: THOOTHU POE THENRALAE

AUTHOR: M. SINGARAYAR

DATE OF PUBLICATION: DECEMBER **2000**

PAGES: 46

COPIES: 300

PUBLISHERS: *Tamil Mathy, Jaffna*

PRINTERS: *St. Joseph's Catholic Press, Jaffna.*

COVER: *Sun Graphic Media, Colombo*

COPYRIGHT: *Singarayar Vaseekaran*

PRICE: *Rs* 65/-



மனக்களைப்பால்
நான் சோர்வுற்ற பொழுதெல்லாம்
மதுரத் தமிழ்ப்பால் ஊட்டி
என்னை மகிழவைத்த
ஆன்ற தமிழறிஞரும்
என் ஆசிரியப் பெருந்தகையுமான

அமரர் **பண்டிதர் செ. செல்வரத்தினம் அவர்களின்**
**இனிய நினைவுக்கு**

# அணிந்துரை

## கலாநிதி எஸ். சிவலிங்கராஜா அவர்கள்

(தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)

அன்பர் மு. சிங்கராயர் அவர்களின் 'தூது போ தென்றலே'! என்னுங் கவிதை நூலைக் கண்டு மகிழ்ந்தேன். தமிழ் இலக்கியப்பரப்பிலே 'தூது' இலக்கியங்களுக்குச் சிறப்பான தோர் இடமுண்டு.

கவிஞரின் உள ஆதங்கத்தைத் தென்றலிடங் கூறி அனுப்பும் இத் தூது இலக்கியத்திலே பக்திச் சுவை நனி சொட்டுகின்றது. உடலினாலே சோர்வுற்றிருந்தாலும் கவிஞர் உள்ளத்தாலே சோர்வடையவில்லை என்பதைக் கவிதைகள் புலப்படுத்துகின்றன.

கற்கண்டுச் சொற்கொண்டு கவிஞர் தென்றலைத் தூதனுப்புகின்றார். தூதுப் பிரபந்தத்திற்குரிய வரன் முறைகளைப் பேணுகின்ற கவிஞரிடம் புதுமையும், பொலிவுங் கலந்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

கவிஞர் சிங்கராயரின் 'தென்றல் விடுதூது' அவரது 'நெஞ்சு விடுதூதாகவே' அமைந்திருக்கின்றது.

நல்ல தமிழ்ப் புலமையை வரன்முறையான கல்வியினூடு பெற்ற கவிஞர் பலகாலம் ஆசிரியப் பணியாற்றிப் பழுத்த அனுபவசாலியாகவும். பக்திமானாகவும் விளங்குகிறார். என்பதை இக்கவிதைகள் புலப்படுத்துகின்றன.

சிறுகதை, நாடகம், கவிதை எனும் பல்வேறு துறைகளிலும் தன் ஆளுமையைப் பதித்தவர் திரு. மு. சிங்கராயர் என்பதை ஈழத்து இலக்கிய உலகம் அறியும்.

பழமையிலே காலூன்றிப் புதுமையிலே ஆக்க இலக்கியம் படைப்பவர்களிடம் ஒரு தனித்தன்மை மிளிர்வதைக் காணலாம். கவிஞரின் கதைகள், நாடகங்கள், நாட்டுக் கூத்துக்களிலே 'ஒருவித தனித்தன்மை' காணப்படுவதை அவதானித்துள்ளேன்.

கவிதைத் துறையிலும் 'மரபுவழி' நின்று எழுதுபவர் உயர் திரு. சிங்கராயர் அவர்கள். அவரின் கவித்துவத்தின் திறனை இத்தூது இலக்கியத்திலே சிறப்பாகக் காணமுடி கின்றது.

கவிதைப் போட்டிகள் பலவற்றிலே பரிசில்கள் பல பெற்றவர் என்பது ஈண்டு நினைவு கூரற்பாலது

அழகான, இனிமையான, தெரிவுசெய்த சொற்களை அடுக்கிக் குதூகலத்துடன் குழந்தை யேசுவுக்குத் தூது விடும் கவிஞரைப் போற்றுவோமாக.

கிறிஸ்தவத் தமிழ் இலக்கியச் சோலையிலே புதுவதாகப் பூத்து மணம் வீசும் இத் தூது நூல் நின்று நிலைக்கும் தன்மை வாய்ந்தது.

ஈழத்துக் கிறிஸ்தவத் தமிழிலக்கியம் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளுவோர் 'தூது போ தென்றலே'! எனும் இவ் விலக்கியத்தை எக்காரணங் கொண்டும் தவிர்க்க முடியாது என உறுதியாக நம்புகின்றேன்.

எஸ். சிவலிங்கராஜா

யாழ்ப்பாணம்.

21. 12. 2000

# என்னுரை

இலக்கியவளம் மிகுந்துள்ள எந்தமிழ் மொழியிலே ஏற்றமும், எழிலுங்கொண்ட சிற்றிலக்கியச் செல்வங்கள் சங்க காலத்திலே முளை விட்டு கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதல் தழைத்து வளர்ச்சியுற்றன. தித்திக்கும் சிற்றிலக்கியங்களாலும் தமிழ் உலகின் எத்திக்கும் புகழ்ந்து பேசப்படுகின்றது. தமிழிலுள்ள தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களி லும் சிலேடை, மடக்கு என்ற சொல்லணிகளும் உவமை, உருவக மென்ற பொருளணிகளும் நிறைந்து காணப்படுகின்றன. உலா, சதகம், பிள்ளைத்தமிழ், கலம்பகம், பரணி, தூது, ஆற்றுப்படை என்பன இன்றும் வழக்கிலுள்ள சிற்றிலக்கியங்களாக மிளிர்கின்றன.

இச்சிற்றிலக்கியங்களுள் பொருட்சிறப்பால் நெஞ்சை விம்ம வைப்பது தூதாகும். அரசர்கள் பகைவர்களிடத்திலும், புலவர்கள் வள்ளல்களிடத்திலும் தலைவன் தலைவியிடத்திலும் தூதனுப்புவதைத் தொல்காப்பியமும், தங்கம் நிகர்த்த சங்க நூல்களும் கூறுகின்றன உவமை நலமும், உருவக வளமுங்கொண்ட தூது நூல்களுட் சில பேரின்பப் பொருளமைதி கொண்டு தோற்றம் பெற, பல சிற்றின்பப் பொருளமைதி கொண்டவையாகவே துலங்குகின்றன.

சமய எழுச்சிக் காலத்தில் அன்னம், அன்றில், குருகு, குயில், கிளி, நாரை, பூவை, வண்டு, வாரணம், பறவை, தென்றல், சேவல், கொண்டல் என்பனவற்றைத் தூது விடுத்ததாகத் தமிழிலக்கியம் கூறுகின்றது. அகநானூற்றில் நண்டைத் தூது விடுவதாகவும், நற்றிணையில் நாரையைத் தூது விடுவதாகவும் சொல்லப்படுகின்றது. கோப்பெருஞ் சோழனிடம் பிசிராந்தையார் அன்னச்சேவலைத் தூது விட்டார். வளனாகிய சூசை மண்ணுலக வாழ்வைத்துறந்து விண்ணுல குக்குத் தூதராகச் சென்றதைத் தேம்பாவணியின் தூதுரைப்படலத் தில் வீரமாமுனிவர் கூறுகின்றார். தென்றலைப் பாடாத இலக்கியத் தையும், அது தொட்டுச்செல்லாத புலமையாளனையுங் காண்பதரிது 'தண்டமிழ்த் தென்றல்' என்று கம்பனும், தென்னந் தமிழினுடன் பிறந்த சிறுகால்' என்று குமரகுருபரரும், சந்தனாசலத்தினின்றுந் தமிழுடனளைந்து வந்த மந்த மாருதம் என்று திருவிரிஞ்சைப் புராண ஆசிரியருந் தென்றலின் இனிமைபற்றி விதந்து பேசவில்லையா?

தூதுச் சிற்றிலக்கியம் கலிவெண்பாவினாலேயே இயற்றப்படு தல் வேண்டுமென்பது தமிழிலக்கணம் இதனைப் பயிறரும் கலிவெண் பாவினாலே உயர்திணைப் பொருளையும், அஃறிணைப் பொருளையும் சந்தியில் விடுத்தல் முந்துறு தூதெனப் பாட்டியற் புலவர். நாட்டினர் தெளிந்தே என்ற இலக்கண விளக்கச் சூத்திரத்தால் அறியலாம். ஆனால் வட மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட தூது நூல்களுட் சில ஆசிரியப் பாவினாலும் இயற்றப்பட்டுள்ளன. கி.மு. 5ஆம்

நூற்றாண்டில் எழுந்த மகாகவி காளிதாசனின் மேகதூதத்தை 1928ஆம் ஆண்டு தமிழகத்தைச் சேர்ந்த தை. ஆ. கனகசபாபதிப்பிள்ளை தமிழில் மொழிபெயர்த்தார். அந்நூல் இவ்வகையைச் சார்ந்ததெனக் கருதப்படுகின்றது. இந்தச் சொல்நெறியை அடியொற்றித் தேவகுமாரன் குழந்தை யேசுவிடந் தாயொருத்தி தென்றலைத் தூது விடுவதைக் கூற எழுந்ததுதான் 'தூது போ தென்றலே'.

காலிலேற்பட்ட முறிவொன்றுக்காக நான் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டிருந்தேன். நெஞ்சமெல்லாம் நெகிழக் கண்களிரண்டுங் குளமாக மாறிக் கரைந்துபோகும் அந்த இரவுகளிலே, கவலையில் மூழ்கிப் போயிருக்கும் எனக்குள்ளே அலையலையாக வந்துமோதும் மானசீகமான அவல உணர்வுகளைச் செய்வதறியாது குழந்தை யேசுவின் காலடியில் அர்ப்பணிப்பேன். என்னிதயத்தின் வெறுமையைக் கலைத்துத் தன் அருட்கொடைகளால் என்னை நிரப்பிய அந்த இறைமைந்தனுக்கு வார்த்தைகளால் நன்றி கூற என்னால் முடியவில்லை. தழைக்குமா இதுவென ஏங்கியிருந்த வேளையில் தமிழூரமூட்டி என் தாளாத இச்சைக்கு வாழ்வளித்த தெல்லாந் தந்தையான அவர்போட்ட பிச்சைதான் அந்த அடைக்கல உணர்வின் அறுவடையே இந்த நூல்.

எரிகின்ற விளக்கினையே மேலும் ஏற்றவந்த கைபோலப் படிப்பவரை வரித்திழுக்குந் தமது அணிந்துரையால் நூலுக்கு வளங்கூட்டிய கலாநிதி எஸ். சிவலிங்கராஜா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். என்னைப் பற்றிய குறிப்புகளைப் பொன்னைப்போல் வைத்துதவிய நண்பரும், நாடறிந்த கவிஞருமாகிய கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் எனதன்பான நன்றிகள்.

மலைக்கவைக்கும் அளவுக்குக் கலைவண்ணத்துடன் முகப்போவியத்தைத் தந்துதவிய கொழும்பு சண் கிறாபிக் மீடியா நிறுவனத்தாருக்கும். காத்திரமான முறையில் இந்நூலை அச்சேற்றிப் பூர்த்தி செய்திருக்கும் யாழ். புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தினருக்கும், பக்கபலமாய் நின்றெனது ஆக்கங்களுக்குத் தக்க வேளையில் துணைக்கரம் நீட்டும் அன்பு நெஞ்சங்களுக்கும் என் இதயங்கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

மு. சிங்கராயர்

955/9, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
21. 12. 2000



## இறைவா!
## உன் பொன்னடி மலர்களுக்கு...!

உள்ளுயிரே! எனக்கமுதம் அளித்த தாயே!
இன்பமறைக் கரும்பே! தேனே!
ஆழ்ந்தறிய முடியாத அன்பின் ஊற்றே!
அருட்கடலில் விளைந்த முத்தே!
வெள்ளம்போல் குருதிகொட்டி வையம் மீட்க
விலைகொடுத்த மனிதப் பொன்னே!
வைகறையின் மோகனமே! வசந்தக் காற்றே!
வழியொளியே! வாழ்வின் முதலே!
பிள்ளையாக அழுதேங்கிப் புலம்பி வாடிப்
பொல்லாத துயரங் கண்டு
பேதலித்துக் கலங்காமற் பேணி நாளும்
பெருங்கருணை தரவே சந்தம்
துள்ளுதமிழ்ச் சரந்தொடுத்துத் தாளிற் சூட்டித்
துதிக்கின்றேன் கயவன் நானும்
தூயாவுன் பூங்கரத்தைத் தூக்கி என்றும்
துணைதந்து எனையாள் நீயே.

# தமிழே!
# உன் காலடித் தாமரைக்கு..!

கற்றோர் சுவைக்கும் அமுதே! குருத்திளமை
பெற்றவளே! தாயே! பொதிகை மலைத்தேனே!
சிந்தனையும் பேரறிவும் சிந்துகின்ற என்தமிழே!
முந்தும் மொழிக்குலத்தின் மூத்தவளே! ஓசையிற்
பாடிப் பறக்கும்பொன் வண்டே! கவியோடை
ஆடிக் களித்திருந்த அன்னமே! வாய்பிளந்த
காலமெனுந் தேளின் கொடுக்கினில் வீழாமல்
ஞாலப் புகழ்வீசி நின்றவளே! மாலிட
வித்துவங்கள் மூசியாடும் வாழ்வில் தளராத
சத்திய வீச்சின் சதங்கையொலி தந்தவளே!
நீதி புகட்ட நிகரிலா முப்பாலைச்
சோதி மகுடமெனச் சூடுந் திருமகளே!
கற்பனைக் கிண்ணத்தில் காவியச் சாறெடுத்த
அற்புதக் கம்பனேறி ஆடிய தொட்டிலே!
கைகள் இழந்தவன் கானவீணை ஏந்தினாற்போல்
தையலுன் பூமடியிற் துள்ளியாடும் ஆவலினால்
கல்வியில்லா மூடன் கவிதை தரவந்தேன்
நல்லன்பால் ஏற்றெனக்கு நாளும் அரிய
புலமைதந்து வாழ்விக்கப் பொன்னின்
மலரடிகள் வாழ்த்தி மகிழ்ந்து வணங்கினனே.

# தூது போ தென்றலே!

மனிதநேயப் புத்திரனே! மகிமைபொங்கும் மன்னவனே!
புனிதத்தின் தவப்பேறே! பிறரன்புப் பெட்டகமே!
இனியசுவைச் செந்தேனே! என்றுவாழ்த்தித் தென்றலே
தனிக்கருணை தரவேசொல் குழந்தை யேசுவுக்கே

பாழுலகை மீட்டெடுக்கப் புனிதமரி யாளீன்ற
வாழ்வூற்றை இருளகற்றும் விடிவிளக்கைக் கண்டபின்னும்
ஆழ்நரகின் துயருக்கு ஆளானேன் தென்றலே
தாழ்ந்துதலை வணங்கிச்சொல் குழந்தை யேசுவுக்கே

பொங்கிவரும் நிலாவொளியும் புதுமுல்லை வடிவழகும்
துங்கமிடைத் தவழ்புனலும் இனிமைதரும் தென்றலே
கங்குல்தான் ஒருநாளே கலையுமிங்கு அவனருளால்
செங்கமல வாயாற்சொல் குழந்தை யேசுவுக்கே

அன்னையினைப் போலன்புக் கரத்தாலே தூக்கிவைந்துத்
தன்னைத்தான் கொடுத்துயிரைத் தழுவுகின்ற தென்றலே
என்னையுமே தொட்டபெரும் இக்கட்டு தனையகற்ற
புன்னகைத்து நடந்தேசொல் குழந்தை யேசுவுக்கே

கோலமயில் நடனமாடக் கோகிலந்தான் வீணைமீட்ட
ஆலவட்டம் நிழற்றிடுதே இசைவண்டு தென்றலே
ஞாலந்தான் உய்யவந்த நாயகனைக் கண்டுநெஞ்சின்
ஓலமதைக் கூறியேவா குழந்தை யேசுவுக்கே

சீதளத்துப் பொதிகையிலே செஞ்சுருட்டிச் சலசலப்பில்
நாதமெழ அமுதவல்லிக் கொடிநுடங்குந் தென்றலே
நீதிவழி நடந்தறியாப் பணப்பேய்கள் முகமூடி
ஏதுமற அருளச்சொல் குழந்தை யேசுவுக்கே

ஆழநெடுங் கடலலைகள் உரசிவந்து கிள்ளிவிடத்
தாழம்பூ இதழ்சிலிர்க்கத் தொடுகின்ற தென்றலே
வாழவழி தெரியாது விழிபிதுங்கி ஏங்குமெனைச்
சூழநிற்குந் தொல்லையைச்சொல் குழந்தை யேசுவுக்கே

சாந்தினது நறுமணமும் சவ்வாது அகில்மணமும்
ஏந்திவந்து குழவிபோல அரவணைக்குந் தென்றலே
பூந்தாது தீப்பட்ட கதைபோல்நான் புலம்புகின்றேன்
மீந்திருக்கும் சேதிசொல்வாய் குழந்தை யேசுவுக்கே

சாதிமதம் பாராமல் சாத்திரங்கள் அறியாமல்
மேதினியில் எவ்வுயிரும் மகிழவைக்குந் தென்றலே
மோதியெழும் சூறையிலே மலர்மொக்காய்த் தவிக்கின்ற
காதகியென் நிலைகூறாய் குழந்தை யேசுவுக்கே

முள்ளிடையே செம்மலரை முறுவலிக்குங் கோங்குடனே
கள்ளூறிடும் முளரியையும் கைப்பிடித்த தென்றலே
கொள்ளைகொலை இங்குமூளுங் கானகத்தீ போலெரியும்
உள்ளதெலாம் எடுத்துச்சொல் குழந்தை யேசுவுக்கே

அகவையொரு பன்னிரண்டில் ஆலயத்தில் பிரிந்துபோக
மிகவருந்தி வளனோடு மரியாளும் தென்றலே
முகவான இருள்விலக முழுநிலவைக் கண்டனர்நான்
சுகம்பெறத்தான் சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

தூயதமிழ் வெண்பாவின் தூய்மையினைச் சுமந்துநல்ல
ஆயனைப்போல் மந்தைகாத்த அண்ணலிறை மைந்தனிடம்
தாயென்னை வருத்துகின்ற துன்பத்தைத் தென்றலே
நீயறிந்தாற் சொல்லிவிடு குழந்தை யேசுவுக்கே

வாக்கினிலே நறுந்தேனும் வஞ்சகத்தை மனமுமேந்தும்
திக்குணத்தோர் என்றாலுந் தழுவுகின்ற தென்றலே
ஈக்கள்போல் எனைக்கொட்டும் மதிகேடர் அவதூறு
போக்கியருள் தந்திடச்சொல் குழந்தை யேசுவுக்கே

சீதமலர் இதழ்தடவி செழித்தவஞ்சிக் கொடிதழுவிக்
காதலிலே நிலாமுற்றக் கவிபாடுந் தென்றலே
ஏதுமறி யாதுழலும் ஏழைநெஞ்சப் பிரலாபம்
பாதமலர் தொழுதேசொல் குழந்தை யேசுவுக்கே

அத்துவானப் பெருவெளியில் ஓவியப்பூஞ் சிறகடிக்குந்
தத்தையிடம் மாங்கனியின் தினவுகூறுந் தென்றலே
முத்துதிரும் விழிகளிலே மனக்கிடக்கை தெரியலையோ
கத்தியழும் வியாகுலஞ்சொல் குழந்தை யேசுவுக்கே

புற்றிருக்கும் அரவுக்கும் புறாவுக்கும் மானுக்கும்
பெற்றெடுத்த மதலைக்கும் பாசமழை நீசொரிவாய்
சுற்றுகின்ற ஒருகாலின் சுகமிழந்தேன் தென்றலே
சற்றிதனைச் சொல்லிவிடு குழந்தை யேசுவுக்கே

மஞ்சோடு உறவாடி மலைமீது முகம்பதித்துன்
நெஞ்சுவிம்ம இளவேனில் நுகைக்கவருந் தென்றலே
பஞ்சணையில் உறங்கியும்நான் பால்நிலவில் தனித்திருந்தும்
சஞ்சலந்தான் மிஞ்சும்சொல் குழந்தை யேசுவுக்கே

சத்தமிடுங் கடலலைகள் சொக்கவைத்துக் கரைமுகத்தில்
முத்தமிடக் கல்யாணி மீட்டிநிற்குந் தென்றலே
எத்தனையோ பெருந்துயர ஈட்டிகளாற் எனைப்பிளக்கும்
அத்தனையும் சொல்லுவாய்நீ குழந்தை யேசுவுக்கே

மண்ணுலகில் வாழ்வினுக்காய் மனமுடைந்து நான்சிந்தும்
கண்ணீரில் எதிர்பார்ப்பு கரைந்தொழுகிப் போனதுவே
விண்ணகத்துப் புனிதர்கள் வேண்டுதலை அருள்பவர்க்கிப்
பெண்ணுணர்வைத் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

காட்டுகின்ற ஒளிவிளக்கைக் கண்டபின்னுந் திசைமாறி
ஓட்டுகின்ற கப்பலூரைச் சேர்ந்திடுமா தென்றலே
வாட்டுகின்ற துயரகன்று விடிவெள்ளி முளைக்காதோ
கேட்டுநின்றேன் அருளெனச்சொல் குழந்தை யேசுவுக்கே

நோயாலே உருக்குலைந்து நொந்துபோன வேளையிலே
தாயாகி இளநகையாற் தொட்டணைக்குந் தென்றலே
வாயாலே பொய்யுரைத்துப் பித்தலாட்டம் வளர்த்தவளைக்
காயாது இரங்கச்சொல் குழந்தை யேசுவுக்கே

குன்றிலாடுங் குமரிபோலக் குறிஞ்சிப்பூ மடல்விரிக்கச்
சென்றதனை யாசித்துச் சொப்பனத்தில் மூழ்கினையா?
நின்றஎந்தன் செவியிலிடர் நாராசம் பாய்ந்ததையோ
தென்றலேசொல் தேவமகன் குழந்தை யேசுவுக்கே

மண்ணகத்தின் இருள்கிழித்த முழுநிலவே! தொங்கிநிற்கும்
விண்ணுலகை ஆள்பவனே வாழ்கவென்று மடைதிறந்த
கண்களினாற் பூச்சொரிந்தேன் காலடியில் தென்றலே
எண்ணுவதை ஒருமுறைசொல் குழந்தை யேசுவுக்கே

தெங்குசூழுந் தோப்பிலிலே நடக்குமிளந் தென்றலே
தங்கமென மின்னுமவர் திருத்தலமே நீசென்று
பொங்கியெழுங் கடலினிலே படகுபோல்நான் அலைமோதி
மூங்கிவிட்ட சங்கதிசொல் குழந்தை யேசுவுக்கே

முடியரசர் தொழுதேற்றும் மூவுலகக் கோமகனைக்
கொடுங்கோலன் ஏரோது கொன்றிடவே தேடுகையில்
மடிமீது சுமந்தமரி சூசையுடன் பயணித்த
தொடரவலந் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

சிப்பியிலே முத்திருக்கும் செழித்துயர்ந்த கானமரக்
கொப்பினிலே கனியிருக்கும் கன்னியரின் அழகுமுக
ஒப்பனைக்கும் மலையிற்தான் அகிலிருக்கும் என்னிடமோ?
செப்பலாமோ தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே.

குமுறியெழுங் கடல்கூட ஒருவேளை ஓய்ந்திருக்கும்
உமிழொளிச் சூரியனும் இராப்பொழுதிற்
துயில்கொள்வான்
அமைதிபூத்து யுத்தமோய வழியினியும் பிறக்காதோ
சுமையிறக்க தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

விலங்கிதயம் நம்மிடையே வேரெறிந்தால் உண்மையொளி
துலங்கவரும் உலகினைத்தான் காணலாமோ தென்றலே
கலங்கிவிட்ட குட்டையில்மீன் பிடிக்கவெண்ணும்
வெறும்மலட்டு
நிலங்களென்றும் விளையுமாசொல் குழந்தை யேசுவுக்கே

நாதமெழுக் கடலலையின் நரம்புதனை மீட்டிவண்ணப்
பாதங்கள் ஆரணியக் கார்த்திகைப்பூ மேற்பதிப்பாய்
மாதங்கள் ஒருபத்தாய் மரியன்னை சுமந்துபெற்ற
காதையெண்ணித் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

கைதுடிக்க மனந்துடிக்கக் கண்கலங்கித் தான்துடிக்க
மெய்துடிக்கச் சரணடைந்தேன் மந்தகாசத் தென்றலே
பொய்புரட்டும் ஏமாற்றும் பழியுமெனை உருக்குலைக்கும்
வையகத்தில் அருள்தரச்சொல் குழந்தை யேசுவுக்கே

வெண்ணிலவால் அல்லிமகள் இதழ்விரிப்பாள் பிரவகிக்குந்
தண்ணீரால் வாழ்வாள்செந் தாமரையாள் நான்வடிக்குங்
கண்ணீரால் என்னபயன் குளிர்ந்தடிக்குந் தென்றலே
புண்ணுற்ற நெஞ்சினைச்சொல் குழந்தை யேசுவுக்கே

மாலைக்கு மதியுண்டு தோப்புக்கு நீயுண்டு
பாலைக்கோ பூவுமுண்டு ஏழைக்கு என்னவுண்டு
காலைமணங் குழைத்துவீசுந் தென்றலே என்துயரில்
நாலைந்து நெகிழச்சொல் குழந்தை யேசுவுக்கே

அன்னங்கள் நடைபயிலும் ஆற்றோர மணல்மீது
மன்னுபுகழ்த் தமிழ்பரவும் மருக்கொழுந்துத் தென்றலே
இன்னுமிங்கே பூகம்பம் எத்தனைநாள் போதுமினி
சின்னக்கால் நகர்த்திச்சொல் குழந்தை யேசுவுக்கே

தாய்த்தமிழின் பூமணத்தைத் தாங்கிவீசுந் தென்றலே
பேய்களாடும் மனிதவேட்டைக் காலடியில் அலைபுரண்டு
பாய்கின்ற குருதியாறும் பொல்லாங்கும் எந்தநாளில்
ஓய்ந்துநிற்கும் ஏக்கஞ்சொல் குழந்தை யேசுவுக்கே

எழுவானம் சிவந்துவர இளங்கதிரும் மூப்பெறிய
உழுதுவிட்ட தங்கவயற் பயிர்களிலே உன்னாட்சி
அழுவதற்கா நான்பிறந்தேன் இப்புவியிற் தென்றலே
முழுக்கதையுஞ் சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

சிந்தையணு ஒவ்வொன்றும் சிலிர்க்கவீசுந் தென்றலே
மொந்தைக்கூழ் கண்டதுமே மொய்க்கின்ற ஈக்கள்போல்
விந்தையான உலகசுக வெறிமயக்கில் நான்வீழ்ந்து
கந்தறுந்த சேதிசொல்வாய் குழந்தை யேசுவுக்கே

பூதேடும் அறுகாலான் சுகானாவைப் பொழிந்துவைக்கப்
போதாகும் மந்தாரை புல்லரிக்குந் தென்றலே
ஏதேதோ துயர்கண்டு ஏங்கியழும் என்சோகம்
காதோடு போய்ச்சொல்வாய் குழந்தை யேசுவுக்கே

ஊர்ந்துசென்ற நிலாக்கவ்வ ஓடிவரும் மூசாப்பின்
கார்முகிலை முகம்நோக்கிக் கணைதொடுக்குந் தென்றலே
பார்புகழ வாழவெண்ணிப் படுகுழியில் விழுந்தவளின்
சீர்மலர அருள்தரச்சொல் குழந்தை யேசுவுக்கே

வாள்முனைக்கும் அஞ்சாது வெங்களத்தை ஊடுருவித்
தாள்பணியா ஆண்மைசொல்லித் தலைநிமிர்ந்த தென்றலே
நாள்தோறும் தாய்மண்ணின் நிலைகண்டு நெஞ்சத்தில்
மூளுந்தி தணியுமாசொல் குழந்தை யேசுவுக்கே

வசந்தங்கள் செத்தொழிந்து பிரளயமே வாழ்வாகிக்
கசந்துவிட்ட நுனிக்கரும்பாய்க் காலத்தைத்
தோற்றுவிட்டேன்
பசப்பிவிட்ட சொல்லில்வாய்ப் பந்தலிடத் துடிக்குமதை
அசைந்துவருந் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

அவலமுற்ற மனந்தடவி ஆற்றிவிடுந் தென்றலே
குவளைமலர் பூத்தகண்ணும் இளங்குருத்துப் புன்னகையும்
கவலைக்கும் மருந்துமான கஞ்சமுகந் தரிசித்துத்
தவறெல்லாம் பொறுக்கச்சொல் குழந்தை யேசுவுக்கே

அஞ்சியழுங் குழவிதனை அரவணைக்குந் தாய்போல
வஞ்சமின்றி மலர்க்காட்டை வட்டமிடுந் தென்றலே
நெஞ்சத்திற் கொந்தளிக்கும் நெருக்குவாரந் தானகலக்
கெஞ்சுகின்றேன் எனச்சொல்வாய் குழந்தை யேசுவுக்கே

ஆரிடர்தான் விலகாதோ எனவேங்கும் உயிர்களெலாம்
பேரின்பச் செந்தேனைப் பருகவைத்த தென்றலே
காரிடிபோல் அவலங்கள் கடுகடுக்கும் என்நெஞ்சங்
கோரியவோர் வரந்தரச்சொல் குழந்தை யேசுவுக்கே

தூங்கிவிழும் அருவிதனைத் தொட்டிழுத்து முந்தானை
தாங்கிவிட்ட கரமெடுத்துத் தாலாட்டுந் தென்றலே
ஏங்கியுடல் தளர்ந்துதலை எழுத்தெண்ணிக் கலங்குமிடர்
நீங்குமாசொல் பூநெஞ்சக் குழந்தை யேசுவுக்கே

மதிக்கலசம் அருளப்பர் மெஞ்ஞானப் புதல்வனுக்குக்
குதித்தநதி யோர்தானில் கலிப்பாபோற் துடித்தலைகள்
சதிராட்டத் திருமுழுக்கு செய்தாரே தென்றலே
கதிதரச்சொல் எனக்கினிமேல் குழந்தை யேசுவுக்கே

சோலையுந்தன் மாளிகையோ சுற்றுலாவில் இளவரசோ
மாலைசூடி வரஅன்றில் மயங்குதுபார் தென்றலே
மேலையிலே கதிருறங்க மண்ணையப்பும் இருள்போல்நான்
மூலையிலே கிடப்பதைச்சொல் குழந்தை யேசுவுக்கே

கொல்லையிலே வடிவெடுத்துக் கொத்தோடு கொத்தான
முல்லைகண்டு விரகதாப மூச்சுவிடுந் தென்றலே
தொல்லையினாற் சிறகொடிந்த பறவைபோலத்
துடிக்கின்றேன்
சொல்லாயோ படுந்துயரம் குழந்தை யேசுவுக்கே

சிறந்திலங்கும் நயீமென்ற செழித்தவூரின் விதவைமகன்
இறந்தபின்னுங் கருணைமீறி உயிர்கொடுத்தார் தென்றலே
உறக்கமினி விழிகளுக்கு இல்லையோ எனையிங்கு
மறந்தாரோ மீண்டும்சொல் குழந்தை யேசுவுக்கே

கங்குலடி வேரறுக்குங் கதிரவனை உடுத்தியிளந்
திங்களினைப் பாதமலர் தாங்குவரைப் படியாக்கி
மங்காவிண் மீனினத்தால் முடிதொடுத்த தாய்மகனை
எங்குகாண்பேன் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

தாரகையின் தோட்டத்தில் தங்கநிலா பவனிவர
ஊருக்கு முன்னுன்னாற் கசிந்துவிடும் அல்லிக்கு
தூரத்துப் பச்சைபோலத் தெரியுதேயென் வாழ்வுமனப்
பாரமெலாந் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

ஓலைவேய்ந்த குடிசைக்கும் ஒய்யார மாளிகைக்கும்
பாலையூற்றி வரவுகூறப் பாக்குவைக்குந் தென்றலே
ஆலையிட்ட கரும்புபோல இமைப்பொழுதும்
மகிழ்ச்சியில்லை
மாலைசூட்டிச் சேதிசொல்வாய் குழந்தை யேசுவுக்கே

பொங்குமலை கடல்குமுறப் பேய்க்காற்றுஞ் சுழன்றடிக்கத்
துங்கமுறு கருணைமனத் தெய்வமகன் கையசைத்து
அங்கமைதி நிறைந்துசீடர் அச்சமெலாந் தீர்த்தவர்க்கென்
சங்கடங்கள் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

உருக்கிவிட்ட நிலாவொளியில் ஆறுபொங்கும் செவ்வந்திக்
கருக்கலிலே மல்லிகையும் கொடியிலாடுந் தென்றலே
சுருதியில்லாக் கீதம்போற் சுவையிழந்து கடலிடையே
துரும்பானேன் என்றுசொல்வாய் குழந்தை யேசுவுக்கே

மல்லிகைப்பூ இதழ்துழாவி மதுவண்டு தேனருந்த
முல்லையுமுன் உதயராகங் கேட்டிருக்கும் முற்றத்தில்
கல்லையொத்த நெஞ்சுதனில் கருணைக்கு இடமேது
இல்லையுண்மை தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

மயிலைமுந்தித் தூதுவிட்டால் மழைமேகங் கண்டுநிற்கும்
குயிலேயோ என்றாலோ குந்திவிடும் மாந்தோப்பில்
பயிலுமிசை வண்டையேவப் பூமறிக்குந் தென்றலே
துயிலாமல் நீசொல்லேன் குழந்தை யேசுவுக்கே

நீலவண்ணக் கடலிலாடி நந்தவன மலர்க்குலத்தின்
கோலமுண்ண ஓசிந்துவரக் கொடிநாணுந் தென்றலே
ஓலமிட்ட புயலிடையே புழுதியைப்போற் சிதறிநொந்தேன்
காலெடுத்துச் சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

அந்திவானஞ் சிவப்பேற அல்லிப்பூ மொட்டவிழ்ந்து
சந்திரனைக் கண்டுநாணச் சரசரக்குந் தென்றலே
மந்திவந்து கனிகுலுங்கும் மாந்தோப்பை அழிப்பதுவோ
அந்தகாரம் நீங்குமாசொல் குழந்தை யேசுவுக்கே

தொடுவானும் நீள்கடலும் தொட்டணைத்து முத்தமிட
விடுவிடெனச் சாப்புதாளம் வண்டுதட்டுந் தென்றலே
சுடுமணலிற் புழுப்போலச் சஞ்சலத்தில் வீழ்ந்தமன
நெடுங்குமுறல் தனைச்சொல்வாய் குழந்தை யேசுவுக்கே

கன்றுந்தாய்ப் பசுவோடு கழனியிலே தழைபொறுக்க
நின்றுலர்வும் வேளைபார்த்து நலுங்குபாடுந் தென்றலே
குன்றோடு ஆழ்கடலுங் குவலயத்தில் உள்ளமட்டும்
என்றுமெந்தன் துதிசொல்வாய் குழந்தை யேசுவுக்கே

மாங்கிளையில் குயிலமர்ந்து முக்கனியின் இசைபிழியப்
பூங்கையால் மலரிதழைப் பொத்திமூடுந் தென்றலே
வேங்கையொன்றின் குகையினிலே வெள்ளாடாய் நான்விம்மித்
தாங்காத நிலையைச்சொல் குழந்தை யேசுவுக்கே

வக்கற்றுப் பசியினாலே வாடுகின்ற மாந்தரது
பக்கந்தான் செம்மாந்து பார்க்கின்ற தென்றலே
செக்கிழுக்கும் மாடாயென் சிந்தைமிக வேகுதையோ
முக்குளித்த நிலைசொல்வாய் குழந்தை யேசுவுக்கே

கொள்ளைமுத்தம் மல்லிகையின் கோமளத்தேன்
இதழ்பெய்து
பள்ளியறை சுரும்புவரப் பொழுதறுதி ஆகிவிடும்
எள்ளிநகை யாடவைக்கும் இழிகுணத்துப் பிறவிக்கு
உள்ளதுன்பந் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

வானுக்குத் தலைவனன்றோ வண்ணநிலா என்றுமுல்லைத்
தேனுக்குப் பொன்வண்டைத் தேடுகின்ற தென்றலே
மீனுக்கு நீள்வாலும் பாம்புக்குத் தலையைநீட்டும்
ஈனநெஞ்சக் குமுறலைச்சொல் குழந்தை யேசுவுக்கே

குங்குமத்தை மறந்தநெற்றி குளிர்நீரை இழந்தவோடை
மங்கலங்கள் தொலைத்தமனை மாருதத்தைத்
துறந்தசோலை
திங்களினைப் பிரிந்தவானந் துலங்கிடுமா தென்றலே
கங்குகரை யிலாத்துயர்சொல் குழந்தை யேசுவுக்கே

பங்கயத்தைச் சூரியனும் புன்னகையால் மாலையிடக்
கொங்கவிழ்ந்த முல்லையிலே கோடிநிலா அழகுகண்டேன்
இங்குதீயிற் புழுவாகத் துடித்தழுதேன் தென்றலே
அங்குசென்று சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

தாய்மரியாள் மடிமீது தவழுநிலாக் கொழுந்துபார்த்துப்
பாய்கின்ற புதுவெள்ளம் போல்மகிழ்ந்தேன் தென்றலே
சாய்ந்தாடிக் கன்னத்தில் சித்திரந்தான் தீட்டென்று
ஓய்ந்தவேளை சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

நூல்போலுங் கற்றோரைக் கவர்ந்திழுத்து நிலமகளை
ஆல்போலும் விழுதெறிந்து அரவணைக்குந் தென்றலே
பாலுக்குள் நெய்போல மறைந்தமோனைப் பொருளிடமுன்
கால்நடக்க என்நிலைசொல் குழந்தை யேசுவுக்கே

பாதிவிழி வாசலூடு பார்த்தமனோ ரஞ்சிதத்தைக்
கோதிவிட்டு மகிழ்ந்துபுல்லாங் குழலூதுந் தென்றலே
மோதிவரும் பெரும்புயலில் முதிர்சருகாய் அலைகின்றேன்
காதிரண்டில் இதனைச்சொல் குழந்தை யேசுவுக்கே

கையகத்தில் உயிர்க்குலத்தைக் கருணையிலே உறங்கவைக்க
வையகத்தில் நிகராருன் வாஞ்சைக்குத் தென்றலே
பொய்யகத்தில் குடியிருத்திப் பொறாமைக்குத்
துணைதருமென்
மெய்யுருக முறையோசொல் குழந்தை யேசுவுக்கே

கானலைநீர் என்றோடிக் களைத்துவிழும் மான்போல
நானலைந்து வாடுகின்றேன் நெஞ்சுவெந்து தென்றலே
தேனலைகள் நதிமடியிற் தாவுகின்ற இன்பம்போல்
வானமுத சுகந்தரச்சொல் குழந்தை யேசுவுக்கே

அந்திநிலா மயங்கிவர ஆனந்த நதிபுரள
சந்தனத்தின் மணத்தோடு சங்கமித்த தென்றலே
வெந்தழலிற் புழுப்போல்நான் வாடுவதைக் கண்டு நீயும்
எந்தனிடர் சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

நீராடும் அன்னத்தின் சிறகுகளை நீவிவிட்டுத்
தேரேறி இளங்காலைப் பொழுதில்வா தென்றலே
வேரோடிக் கிளையெறியும் வஞ்சகத்தின்
கொழுகொழுப்பிற்
போராடும் என்நிலைசொல் குழந்தை யேசுவுக்கே

களத்தினிலே புறமுதுகு காட்டியவன் வீரனில்லை
விளம்புமுன்னே நிரைவருதல் வெண்பாவுக் கழகில்லை
உளமொடிந்த எனையவரும் மறப்பதுவும் நீதியில்லை
தளர்ந்துபோனேன் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

புதுப்புனல்போல் பொங்குமெழிற் பருவத்தாள் தேயாத
மதிமுகத்தாள் மகதலேனூர் மரியாளைத் தென்றலே
இதழ்விரித்து நகைசெய்து ஏற்றாரே தட்டுகிறேன்
கதவொருநாள் திறக்குமாசொல் குழந்தை யேசுவுக்கே

உலகமேதான் துயின்றபோதும் உணர்வுகளைத் தட்டிமனக்
கலகமூட்டச் சாளரத்திற் காத்திருக்குந் தென்றலே
திலகத்தை இழந்துவிட்ட நெற்றிபோலத் தலைகவிழ்ந்தேன்
நலமுறவே அருள்தரச்சொல் குழந்தை யேசுவுக்கே

மாவுடனே தழுவுகின்ற மரகதம்போற் கொடிகண்டு
தாவுகின்றாய் ஊர்வெளுக்கத் தாமரையில் தென்றலே
சாவினிலுஞ் சிகரமான சஞ்சலந்தான் சுமந்தலறிக்
கூவுகின்றேன் என்றேசொல் குழந்தை யேசுவுக்கே

கொடியினிலே பூத்திருந்து கோலாட்டம் மலர்களாட
வடமொத்த விழியெறிந்து விலங்குமாட்டுந் தென்றலே
விடியலையே எண்ணியேங்கி வேகுதையோ என்நெஞ்சம்
நெடுந்துயரந் தன்னைச்சொல் குழந்தை யேசுவுக்கே

தைமாதப் பனிக்குளத்திற் தோய்ந்துதலை நீராடி
வைகறைக்குப் பூபாள வாழ்த்திசைக்குந் தென்றலே
மைவண்ண விழியழகை முகநிலவில் நான்காணக்
கைதூக்கி அருளச்சொல் குழந்தை யேசுவுக்கே

மலைபிளக்கும் இடிகேட்டு மயில்தோகை விரிக்காதோ
சிலையெடுக்குங் களத்திற்பூ சிரிக்காதோ தென்றலே
இலையுதிர்ந்த மரமாய்நான் இருக்கின்றேன் மனங்கரைந்து
தலைதாழ்த்திச் சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

நெய்தலிலே மணலெடுத்து நேற்றுத்தான் வீடுகட்டப்
பெய்தமழை பேயாட்டம் ஆடியதாற் பூங்கனவு
எய்தஅம்பு மையிருட்டில் இலக்கின்றிப் போனதுபோல்
பொய்த்தகதை தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

தேங்குவளை நாளரும்பைத் தினைப்புனத்தில் வட்டமிட்டு
மூங்கிலது மௌனத்தைக் கலைத்துவிட்ட தென்றலே
தாங்குமாஎன் பிஞ்சுமனம் தரணியிலே இடர்கண்டு
வீங்குபுனல் கடந்தேசொல் குழந்தை யேசுவுக்கே

தாகத்தைப் பயிர்களுக்குத் தீர்ப்பதற்குப் பனித்துளியா
மோகத்தின் வெறியடங்க ஆசைகளா மகுடியூதும்
நாகதாளி முட்போல நெஞ்சினையே உறுத்துமெந்தன்
சோகமதைத் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

பட்டினியும் வறுமையும் பொல்லாத துன்பமுடன்
கொட்டுகின்ற பேய்மழையும் கொக்கரிக்கும் புயலுமென
முட்டிநின்று முகாரியைத்தான் மீட்டுதையோ தென்றலே
சிட்டாகச் சென்றேசொல் குழந்தை யேசுவுக்கே

கஞ்சமலர் முகம்படைத்த கன்னிமரி மணவாளன்
மிஞ்சிவிடும் நீதிமானாய் மூத்துநின்ற வளனாரைக்
கொஞ்சிடவே மழலையானார் கோதையிடந் தென்றலே
அஞ்சிடாமல் வரச்சொல்வாய் குழந்தை யேசுவுக்கே

கற்பிலொரு மலைமுடியே! கருணைக்கோர் நதியலையே!
அற்புதத்தில் கார்முகில்தான் அந்தோனி தென்றலே
தற்பரனுந் தும்பைமலர் போலவர்கை யாடிடநான்
பெற்றதுயர் அறியச்சொல் குழந்தை யேசுவுக்கே

முகில்துளைந்து அமுதநிலா முகங்காட்ட ஆம்பலுக்கு
வகிடெடுக்கத் தவழ்ந்துவருந் தென்றலே பிறரோடு
பகிர்ந்துவாழுங் குணமறியாப் பேதமையைக் கண்டுநெஞ்சம்
நெகிழாதோ இனிமேற்சொல் குழந்தை யேசுவுக்கே

காவிவண்ண விழிகளுக்குக் கலையெழுதும் மைதீட்டிச்
சீவிமுடி திருத்திநறுஞ் சந்தனத்தில் திலகமிட்டுப்
பூவிரியும் முகப்பார்த்துப் பசிமறப்பேன் தென்றலே
தூவிமலர் சூட்டியேசொல் குழந்தை யேசுவுக்கே

ஆற்றாது மக்கள்தான் அழுதகண்ணீர் ஆட்சிதனைக்
கூற்றமாக மாறிநின்று கொல்லுமுண்மை அறியாயோ
ஏற்றாது கரிந்துபோகும் ஒளிவிளக்கா மனிதவாழ்வு
தேற்றுவாரார் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

விண்ணேந்தும் முழுநிலவில் விளையாடிக் கிடக்கின்ற
மண்ணிடையே கரைகாண முடியாத அருள்பெற்ற
பெண்ணமுதின் தெய்வீகப் பெருமகனைத் தென்றலே
எண்ணத்தில் இடந்தரச்சொல் குழந்தை யேசுவுக்கே

தொட்டிலிற்பொன் மணிதவழத் தாலாட்டுப் பாடிநிற்பேன்
கட்டிலிலே கத்தரிப்பூ விழிதுயிலப் பார்த்திருப்பேன்
பட்டுடுத்தி அவர்வந்தாற் பரவசந்தான் தென்றலே
வெட்டவெளி தாவிச்சொல் குழந்தை யேசுவுக்கே

அன்புமலர்க் கைவீசி ஆடிவரும் ஏந்திழையின்
தென்னம்பூ மழலையிலே தெவிட்டாத சொல்லின்பம்
துன்பமெனைப் பேரிடிபோற் துரத்திவருந் தென்றலே
முன்னேகால் வைத்துச்சொல் குழந்தை யேசுவுக்கே

கவ்வாது முகில்விட்ட கார்கால நிலாவழைக்கச்
சவ்வாது குழைத்துவருஞ் சோலையிளந் தென்றலே
செவ்வாழைத் தோட்டம்போல் சுழிக்காற்றில் சரிந்ததைநீ
எவ்வாறு சொல்வாயோ குழந்தை யேசுவுக்கே

தேனிங்கு துளும்பிவிழத் தாமரைக்கு வண்டுவரும்
வானிங்கு களையிழந்தால் வட்டநிலாத் தேடிவரும்
யானிங்கு வாடுகிறேன் எறியீட்டி உடல்பிளக்க
ஏனென்று தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

முள்ளடர்ந்த காடுழுது முல்லைக்கு இமைகொட்டிக்
கள்ளூறும் செம்பருத்திப் பூக்கிள்ளுந் தென்றலே
புள்ளொன்று சிறகிழந்து படுந்துயர்போல் மின்னாமல்
வெள்ளிடிதான் விழுந்ததைச்சொல் குழந்தை யேசுவுக்கே

நீராக அலையடிக்கும் நதிமீது சுவடின்றித்
தேராக நடைபழகுந் தேனமுதத் தென்றலே
வேரோடு சாய்ந்துவிழும் விருட்சம்போல் அநவரதம்
போராடும் நெஞ்சினைச்சொல் குழந்தை யேசுவுக்கே

செந்தாழம் பூவோடு சூரிய காந்தியையும்
முந்தானை பிடித்திழுத்து மோடிசெய்யுந் தென்றலே
அந்தந்தோ பசியென்று கையேந்தி அழுவோரின்
வெந்துயரக் கதையைச்சொல் குழந்தை யேசுவுக்கே

நில்லாது வாசந்தி நேரிழைக்குப் பள்ளியிலே
கல்லாத வித்தைகாட்டிக் களித்திருக்குந் தென் றலே
கொல்லாது எனைக்கொல்லுங் கண்ணீரின்
தொடர்கதையைச்
சொல்லாது சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

வாழாது நல்லுயிரை வருத்துகின்ற கயவர்போல்
பாழான கெடுமதியாற் பரிதவித்தேன் தென் றலே
சூழாத துயரத்தீ சுடுகிறதே மலர்ப்பார்வை
வீழாதோ என்மேற்சொல் குழந்தை யேசுவுக்கே

ஓடுகின்ற முகில்மறித்து ஏங்கியழுஞ் சேதிசொல்லி
வாடுமிளம் பயிர்தழைக்க வரங்கொடுக்குந் தென்றலே
மாடுமனை சுற்றமுமென் மனக்குறையைத் தீர்க்கவில்லைத்
தேடியிதைச் சொல்லுவாயோ குழந்தை யேசுவுக்கே

புற்றெடுக்கும் அரவுக்கும் பருந்துக்கும் ஓநாய்க்கும்
சிற்றெறும்பு காக்கைக்கும் சுதந்திரமோ மிகவுண்டு
முற்றிலுமே என்வாழ்வில் மனுநீதி முயற்கொம்பே
குற்றமுண்டோ தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

சேவற்பூ கிறங்கிவிடச் சாமந்தி தன்னையுமே
காவலிடுந் தடைமீறிக் கொஞ்சுமிளந் தென்றலே
ஆவல்தான் கண்மறைக்க ஆசைவழி செல்கின்றேன்
தேவநீதி கிடைக்குமோசொல் குழந்தை யேசுவுக்கே

கொடியசைந்து துவளச்செங் குவளையவள் மெய்சிலிர்க்கத்
துடியிடையாள் வட்டிற்பூ தனையணைத்த தென்றலே
விடிவுகாணப் போர்த்துமூடும் வேதனைகள் கொஞ்சமில்லை
முடிவாகச் சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

புன்னகைக்க மடல்விரித்த பொன்னாம்பல் இதழ்தேயத்
தென்னையிளங் கீற்றெடுத்துத் திரைமூடுந் தென்றலே
என்னகையைத் தொலைத்திங்கு எத்தனையோ நாட்களென்று
சொன்னதையே கேட்டுச்சொல் குழந்தை யேசுவுக்கே

நீத்தெளிக்குஞ் சூரியன்தான் பதுமத்தாள் உயிர்த்துணைவன்
பூத்தெளிக்குஞ் சோலையிற்தான் பூநாகந் துயில்கொள்ளும்
நாத்தெளித்த சொல்லாலே பொடிவைத்து நானழிந்தேன்
காத்தளிக்கத் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

மான்பழித்த விழிகளையே மயக்குதந்தச் செண்பகமே
வானமுத நீர்க்கொடையைச் சிரித்துவாங்கும் பயிர்க்குலமே
நான்பெருக்கும் நதியினைப்பார் தென்றலே அருள்முதிர்ந்த
தேன்கனிகள் வெறுக்குமாசொல் குழந்தை யேசுவுக்கே

பால்வடியும் பூமுகத்தில் பொன்னெடுத்து நல்லோரின்
கால்பிடித்து முழுமூச்சாய் கண்ணே நான் உனைவளர்ப்பேன்
நூல்படித்தும் நாவடக்காப் பேதைநெஞ்சைப் பிளக்கின்ற
வேல்கண்டு தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

வண்டறிந்த நாள்முதலாய் வண்ணநாவற் பூவைமுந்தி
உண்டறிந்த சுவைசொல்லி ஓசையிடுந் தென்றலே
கண்டறிந்த துயரத்தால் மனக்காயம் பட்டழுதேன்
தண்டமிழில் இதனைச்சொல் குழந்தை யேசுவுக்கே

தினைப்புனத்திற் பிறந்ததமிழ்த் தாலாட்டைக் கேட்டின்ப
நினைப்போடு பூக்காட்டில் நுழைகின்ற தென்றலே
தனையுருக்கி ஒளிதந்தார் தியாகத்தின் மெழுகுவர்த்தி
எனையொருகை தூக்கச்சொல் குழந்தை யேசுவுக்கே

பழச்சோலை சிறகடிக்கும் பைங்கிளியின் வாய்பிலிற்றும்
மழலையினாற் ஊதாப்பூ மயங்கிவிடுந் தென்றலே
கழனியிலே நெல்மடியக் கற்றாழை விளையுதந்தோ
அழவிடாமல் வரவேசொல் குழந்தை யேசுவுக்கே

விடியலுக்குக் கட்டியமாய் வசந்தத்தேன் தூறிவர
அடதாளச் சுவைசொட்டும் அக்காரத் தென்றலே
இடியப்பச் சிக்கல்போல் எனைத்தொடரும் வில்லங்கம்
குடிமூழ்கிப் போனதைச்சொல் குழந்தை யேசுவுக்கே

நுரைமலர்கள் கடல்சுமந்து நெளிந்துகொட்ட மூடுபனித்
திரைவிலக்கித் தெள்ளமுத இசைதருவாய் தோடியிலே
தரைதனிலே விழுந்தமீன்போற் துடிக்கின்றேன் தென்றலே
கரைபுரளும் என்துயர்சொல் குழந்தை யேசுவுக்கே

தாண்டாத சுவரேறித் தூதுவளைப் பூமயங்க
வேண்டாத கதைபேசி விளையாடுந் தென்றலே
தூண்டாத விளக்கிருளாய்த் துன்பமெனைச் சூழுதையோ
மூண்டபெருஞ் சோகஞ்சொல் குழந்தை யேசுவுக்கே

பாடாத வாய்திறந்து புதுமலர்கள் சிரித்திருக்க
ஓடாத தேரிலுந்தன் ஊர்வலமோ தென்றலே
ஆடாகப் பலிக்குவந்தும் அகம்பாவம் விடவில்லை
தேடாமற் தேடிச்சொல் குழந்தை யேசுவுக்கே

மானிடரின் தளையறுத்து மீட்பளிக்குங் கருணையினால்
வானைவிட்டுப் புவிக்குவந்த வள்ளலைத்தான் தென்றலே
ஞானியான சிமியோனும் நாப்புகழ ஏந்திநின்றார்
நானொருத்தி துடிப்பதைச்சொல் குழந்தை யேசுவுக்கே

ஞாலந்தன் நினைவிழக்கக் காம்போதி இராகத்தில்
ஓலமிட்டுக் கொடியிற்கால் ஊன்றுமிளந் தென்றலே
காலமென்ற சிலந்திமிகக் குதறுகின்ற பூச்சியெந்தன்
கோலத்தைப் பார்க்கச்சொல் குழந்தை யேசுவுக்கே

வேலிக்குள் முடங்கிநின்று தயிர்வளைப்பூ சிரிக்குதென்று
தாலிக்குப் பெண்கேட்டுத் தேடிவருந் தென்றலே
கூலிக்கு மாரடித்துக் கெட்டழிந்தேன் அருளமுதைப்
பாலிக்கப் புறப்படச்சொல் குழந்தை யேசுவுக்கே

இன்னமுத மழலைதின்று எல்லோரும் மகிழ்வரன்றோ
உன்னருளின் பிரசன்னம் என்விழிக்கே விருந்தையா
பொன்னுக்கு மெருகேறும் பட்டைதீட்டத் தென்றலே
என்னுள்ளத் தகிப்பைச்சொல் குழந்தை யேசுவுக்கே

ஏழைக்கு வாழ்வுவந்தால் எரிமலைபோற் குமுறுகின்ற
கோழைகளின் உலகமிது கேட்டுக்கொள் தென்றலே
வேழத்தின் கால்மிதித்த கரும்புபோல வாடுகின்றேன்
தோழனாகித் தேற்றச்சொல் குழந்தை யேசுவுக்கே

குழந்தைகளைத் தன்னிடமே கூப்பிட்டார் முழுமுதல்வன்
மழலைமொழி அமுதுண்ணும் மங்கைநானுந் தாயன்றோ
தொழுதேன்என் பிள்ளைகளைக் காத்தென்றுந் தென்றலே
அழவிடாமல் ஆளச்சொல் குழந்தை யேசுவுக்கே

கொத்தாகத் தரையினிலே குலுங்குகின்ற மலர்களூடே
வித்தூன்றி எழும்நெருஞ்சி முட்கள்போல் வெறிகொள்ளும்
எத்தர்கள் அட்டகாசம் விடைபெறவோர் வேளைவரும்
தத்திவருந் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

நீதிக்கு மகுடமாக நின்றதவச் சூசையரின்
சோதிமணிக் கரங்களிலே சாய்ந்திருக்கும் வேதநாதன்
ஏதிலியைக் கண்ணோக்க ஏன் மறந்தார் தென்றலே
காதிலிதைக் கேட்டுச்சொல் குழந்தை யேசுவுக்கே

பருந்துகோழிக் குஞ்சினைவாய் பிளந்துநின்று மிகக்குதறி
விருந்தாக்கிப் பிறரன்பை விலைபேசும் உலகமிது
திருந்தாத மன்னுயிரின் துயில்கலையும் நாள்என்றோ
வருந்துகிறேன் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

காரிருளைத் துடைத்தெறிந்த கதிரவன்போல் தென்றலே
மார்கழியின் பனிக்குளிரில் மாடுறையுந் தொழுவத்தில்
பார்போற்றக் கன்னிகையின் மணிவயிற்றில் பிறந்தாரே
தீர்க்கச்சொல் என்கவலை குழந்தை யேசுவுக்கே

காகங்கள் கதிரவனை நெடுந்துயிலாற் கரைந்தெழுப்பும்
மேகங்கள் சரஞ்சரமாய் மின்னலொளிக் கோடெழுதும்
தாகங்கள் மனக்கிண்ணம் ததும்பிநிற்குந் தென்றலே
சோகங்கள் போக்கச்சொல் குழந்தை யேசுவுக்கே

வாடுகின்ற பயிருக்கு மழையுண்டு வளைந்துருண்டு
ஓடுகின்ற நதிபுரளக் கடலுண்டு தென்றலே
தேடுகின்ற ஜெரிக்கோவின் குருடனுக்கு ஒளிதந்தார்
பாடெனக்குப் போதும்சொல் குழந்தை யேசுவுக்கே

அமிழ்தம்போல் மொழிபேசி அன்புசெய்யும் சான்றோரை
உமிழ்ந்துவிட்டுப் போகின்ற உலகமிது தென்றலே
திமிர்வாத மனிதனுக்குத் தன்கருணை ஈந்தவனைத்
தமிழாலே புகழ்ந்தேசொல் குழந்தை யேசுவுக்கே

பொய்யென்ற வாழ்வரங்கின் பழியாட்டக் கூத்திற்குக்
கைத்தாளம் போட்டுநாளைக் கரைத்துவிட்டேன் தென்றலே
ஐயனவன் என்நெஞ்சின் அப்பழுக்கைக் கழுவியினி
உய்யவழி காட்டச்சொல் குழந்தை யேசுவுக்கே

தேன்கூட்டைக் கலைத்துவிட்டுப் பயந்தோடித் தென்றலே
ஏன்துரத்திக் கொட்டுதூ என்றபகற் குருடரிடை
வான்வீட்டைத் துறந்துலகில் வாகைமாலை சூடிநின்றார்
நான்கோரும் வரத்தைச்சொல் குழந்தை யேசுவுக்கே

நேயமுடன் அனைத்துயிரும் நம்புகின்ற வழிநடந்து
சேயணைத்த அன்னைபோலச் சுடர்வீசித் தென்றலே
ஆயனாக நின்றைந்து ஆயிரம்பேர் பசிதீர்த்த
தூயவன்பேர் வாழ்த்திச்சொல் குழந்தை யேசுவுக்கே

பொன்னுடனே மணிமுத்தும் பூந்துகிலுங் கொழித்தாலும்
இன்னுமிங்கேன் வறுமையின் அரசாட்சி தென்றலே
தின்னாத வேளைகளும் துயிலாத இரவுகளும்
என்னாகும் வாழ்வெனச்சொல் குழந்தை யேசுவுக்கே

ஆடியசெவ் வந்திமகள் ஆடைதனைத் தொட்டிழுக்கத்
தேடியோடும் வண்டழகைப் பார்த்திருக்குந் தென்றலே
கோடிசெல்வம் குவிந்தாலுங் குவலயத்தை ஆண்டாலும்
வாடியழும் மனத்தைச்சொல் குழந்தை யேசுவுக்கே

பொன்னூராய் வளங்கொழித்த பெத்தானி மரியாளும்
நன்கலமாம் மார்த்தாளும் நெஞ்சுருகித் தென்றலே
அன்புசெய்த லாசரது உயிர்மீளக் கொடுத்தவள்ளல்
இன்பவடி தொழுதேன்சொல் குழந்தை யேசுவுக்கே

பொருள்பார்த்துக் குணமளக்கும் பிரபஞ்சந் தனைக்கவ்வும்
இருள்கிழிக்க மனங்களுக்கு ஒளிவேண்டுந் தென்றலே
அருள்வடிவாய் பொங்குகின்ற அன்பூற்றாய் அவரிருக்கப்
பெருங்கருணை தரவேசொல் குழந்தை யேசுவுக்கே

வானமதி நோக்கிடசெங் காந்தளிடை வளைந்தொடியத்
தேனொழுகும் இரஞ்சனியை மீளவுமேன் தெளிக்கின்றாய்
ஆனந்தம் ஊனமைகண்ட கனவுதானா தென்றலே
நானடையும் வேதனைசொல் குழந்தை யேசுவுக்கே

மானாரும் ஆடவரும் மொய்த்துமிகக் களித்திருந்த
கானாவூர்த் திருமணத்தில் குடமாறு தண்ணீரைத்
தேனாக்கிச் சாறுதந்த திருமகனைத் தென்றலே
நானாரப் பணிவதைச்சொல் குழந்தை யேசுவுக்கே

தண்ணிலவைப் பிரிந்தவானந் தராதென்றும் காட்சியின்பம்
மண்ணைவிட்ட கொடிப்பூவாப் மதாளிக்குந் தென்றலே
வெண்ணெய்தான் திரளதாழி வெடித்துடைந்த
நிலையில்நான்
கண்கலங்கி அழுவதைச்சொல் குழந்தை யேசுவுக்கே

அன்புமலர்க் கைவீசி ஆடிவந்து மகிழ்வூட்டும்
இன்மழலை போலினிக்கும் இளஞ்சிட்டுத் தென்றலே
என்புருகி நெஞ்சந்தான் கசிந்துவிடும் அவர்வரவால்
துன்பங்கள் துடைக்கச்சொல் குழந்தை யேசுவுக்கே

பொன்மகுடந் தொடமாட்டேன் போலிகளைத்
தொழமாட்டேன்
மின்னுமொளி வைரத்தை மேனியிலே தரிக்கமாட்டேன்
கன்னிமரி ஈன்றமைந்தன் கமலத்தாள் தென்றலே
சென்னிமீதில் வைப்பேன்சொல் குழந்தை யேசுவுக்கே

உண்ணத்தான் கூழுமின்றி உடுக்கவுமோர் கந்தலின்றி
மண்ணிலுயிர் விடும்மனிதப் பூச்சிகள்பார் தென்றலே
கண்ணிரண்டை இமைபோலக் காக்குமவர் அருள்தானிப்
புண்ணையாற்றும் என்றேசொல் குழந்தை யேசுவுக்கே

காசுக்குக் காசுவட்டி கொள்ளைசெய்து நல்லவர்போல்
பேசுமிரு கால்கொண்ட விலங்குகளைப் பார்த்திருப்பாய்
மூசுகின்ற புயலாகும் மனிதமோர்நாள் தென்றலே
வாசலிலே சென்றிதைச்சொல் குழந்தை யேசுவுக்கே

மப்புடனே இருள்கவிய முகடேறி மாதுளம்பூ
துப்பிவிட்ட தேன்பருகித் துள்ளியோடுந் தென்றலே
இப்பிறப்பில் நான்செய்த அக்கிரமக் கூலியிதோ
செப்புமொழி கேட்டுச்சொல் குழந்தை யேசுவுக்கே

வாழ்வுதனை இழந்தோடி வன்னியிலென் சோதரர்கள்
ஆழ்நரகின் வேதனையில் அழுகின்றார் தென்றலே
பாழுலகங் கேட்டிராத பரிதாபம் அவர்க்குற்ற
தாழ்வகல அருள்தரச்சொல் குழந்தை யேசுவுக்கே

பாதையிலே துயில்கின்றார் பசிக்குணவு தானுமில்லை
ஏதிலிகள் வாழ்விதுபோல் எத்தனைநாள் தென்றலே
மோதியெழும் உணர்விலவர் முனகுமொலி கேட்குதையோ
நாதியற்றோர்க் கிரங்கச்சொல் குழந்தை யேசுவுக்கே

குண்டுமழை பொழியுமங்கே குடல்பிளந்து சாயுமங்கே
துண்டுதுண்டாய் வாழ்விடங்கள் தகர்ந்துவிழுந் தென்றலே
மண்டலத்தில் தெரியுதொரு மயானபூமி எம்மவர்க்குத்
தண்டனையோ இந்நிலைசொல் குழந்தை யேசுவுக்கே

நாயுறங்கும் அடுக்களையில் நினைவுறங்கி மேற்குவானில்
போயுறங்கும் சூரியனும் புண்பட்டு எரிக்கின்ற
தீயுறங்கும் மனமென்று தானுறங்குந் தென்றலே
நீயுறங்கி விடாமற்சொல் குழந்தை யேசுவுக்கே

சலித்தெடுத்த நல்லாண்மைச் சான்றோரில் ஏமாற்றுப்
பலிக்காது ஒருபோதும் புவியினிலே தென்றலே
வலிக்கிறது நெஞ்சுக்குள் வாய்பிளக்குங் கபடமெண்ணி
ஒலிக்காதோ உண்மைகள்சொல் குழந்தை யேசுவுக்கே

பேசாது விழிகாட்டிப் பரவசத்தைத் தரும்மலர்கள்
வீசாமல் வலைவீசும் வண்டுக்குத் தென்றலே
கூசாமற் பழிசொல்லுங் கல்நெஞ்சக் குமுறலில்நான்
தூசானேன் என்றுசொல்வாய் குழந்தை யேசுவுக்கே

பயிருக்கு மழையாகப் பூங்கொடிக்குக் கொம்பாக
உயிரொளிக்கு அன்பெனும்நெய் ஊற்றுகின்ற தென்றலே
கயிறறுந்த பட்டம்போல் கலங்கிநொந்து வாடுகிறேன்
தயங்காமல் விரைந்தேசொல் குழந்தை யேசுவுக்கே

நிறைகுடந்தான் தளும்பாது நிலம்பொறுமை இழக்காது
சிறைக்கூடந் திரையிடுமா சிந்தனைக்குத் தென்றலே
திறைகொடுத்தும் வாராது தன்மானம் நெஞ்சத்தின்
கறையகற்றச் சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

நஞ்சுகளாற் சீரழிந்து நாறுகின்ற சமூகத்திற்
பிஞ்சுகளால் வருங்காலம் புதுவனப்பு காணுமுண்மை
அஞ்சுகிறேன் என்றுவரும் அந்தநாளுந் தென்றலே
கொஞ்சுதமிழ் குழைத்துச்சொல் குழந்தை யேசுவுக்கே

தரவை நிலக் களைமுகத்தைக் காட்டியே தற்
பெருமைகொள்ள
உரம்வாங்கிச் செழித்தபயிர் உள்ளிருந்தே ஏங்குதையோ
நரம்பறுந்த வீணையைப்போல் நான்கிடந்தேன் மூலையிலே
கரங்குவித்துத் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

வல்லூறு செம்மாப்பில் வானகத்தே சஞ்சரிக்கத்
தொல்லுலகில் நாளுமேவெண் புறாவுக்குத் துயர்ச்சிறையா?
கல்லுடைக்குஞ் சம்மட்டி கவியெழுதப் பயன்படுமா?
சொல்லுவதைத் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

உதிரமூறிக் கொப்புளித்த கல்வாரி மலையிலன்பு
இதயமாளும் மரியாளை அருளப்பர் தாயாக
மதுரஞான மகன்தந்தார் கையேந்தும் அபலைக்கு
எதைக்கொடுப்பார் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

பொங்குமலை கடல்குமுறப் பேய்க்காற்றும் சுழன்றடிக்கத்
துங்கமுறு கருணைமனத் தெய்வமகன் கையசைத்து
அங்கமைதி நிறைந்துசீடர் அச்சமெலாந் தீர்த்தவர்க்கென்
சங்கடங்கள் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

சில்லறைகள் மலிந்துகாட்டுஞ் சிலுசிலுப்பால் மனிதநேயம்
கல்லறைக்குள் புதைந்திங்கு வெகுகாலந் தென்றலே
சொல்லமனங் கூசுதையோ சூழுமிருள் விலகவாழ்வில்
நல்லொளியை ஏற்றச்சொல் குழந்தை யேசுவுக்கே

வசைசொல்லிக் கற்றூணில் வஞ்சயூதர் கசையடியால்
தசைபிளந்து கிழிந்துதொங்கத் திருத்தோளைச்
சிலுவையுழத்
திசையெலாஞ்செங் குருதிதோய்ந்த கல்வாரித் தியாகத்தை
இசைப்பாட்டாய்த் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

கஞ்சனுக்குக் கோலமயி லாசனமும் பட்டத்துக்
குஞ்சரந்தன் தலைசாய்க்கக் குப்பையுமா தென்றலே
சஞ்சலத்தேள் கொட்டினாலும்சான்றோர்கள் வீழ்வதில்லை
அஞ்சிடாமல் ஓடிச்சொல் குழந்தை யேசுவுக்கே

கோட்டான்தான் மண்ணதிரக் குரல்பிழியத் தென்றலே
பாட்டின்பப் பூங்குயிலும் பாடாமற் துயிலுவதோ?
மூட்டிவைக்கும் வஞ்சகத்தீ மூதறிவைச் சுடுவதில்லைக்
கேட்டிருந்து உள்ளதைச்சொல் குழந்தைப் யேசுவுக்கே

கண்சிமிட்டும் மின்மினியின் கழுத்திற்கு முத்துமாலை
மண்செழிக்க உழைக்கின்ற ஞாயிறுக்கோ முட்கிரீடம்
புண்படுத்துங் கசையடியாற் புனிதங்கள் மறைவதில்லை
எண்ணத்தை நீயேசொல் குழந்தை யேசுவுக்கே

மாணிக்க நிறங்காட்டுஞ் செங்குவளை மலர்விரிய
ஆணிப்பொன் மேனிகண்டா ஆலோலம் பாடுகின்றாய்
காணிக்கை தந்துவரங் கேட்டுவிளக் கேற்றிநின்றேன்
நாணிடாமற் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

புன்னைமலர் சொரிந்துமண்ணில் புரண்டுவிழத் தவித்துநீயும்
அன்னையெனப் பக்கத்தில் ஓடிவந்தாய் தென்றலே
என்னிதயந் துன்பத்தால் உலைக்களம்போல் மாறுதையோ
பொன்னடிகள் தொட்டேசொல் குழந்தை யேசுவுக்கே

நெருடலிலே மான்துள்ளும் நெஞ்சுக்குள் பொன்னுடல்நீ
வருடிவிட்டால் மகிழாதோ வண்ணமுல்லை தென்றலே
கருக்கொண்ட முகில்போலக் கண்கள்நீர் ஊற்றுதையோ
தருணமிது சொல்லிரங்கக் குழந்தை யேசுவுக்கே

குலுங்கியேநான் மலர்சிரிக்கக் கொக்குஆதி தாளமிடக்
கொலுவேறிக் கானடாவிற் கவிபுனைந்த தென்றலே
சிலுவைகளென் தோளேந்திச் சுமைதாங்கி யாகிவிட்டேன்
வலுவிழந்த என்நிலைசொல் குழந்தை யேசுவுக்கே

கவித்தேனைப் பூங்காவில் குயில்சிந்திக் கரைபுரளக்
குவிந்திருந்த தளையவிழும் குறிஞ்சிப்பூ தென்றலே
புவியினிலே ஏழைமுகம் புன்முறுவல் இழந்ததம்மா !
தவித்துருகும் நெஞ்சைச்சொல் குழந்தை யேசுவுக்கே

புதுவண்டு இசைமீட்டும் புன்னாக வரர்ளியிலே
மதுசிந்தி அல்லியேலக் குழல்முடிப்பாள் தென்றலே
எதுவுமில்லை நான்மகிழ ஆற்றொழுக்குப் போலின்பம்
இதுவாழ்வா? குமுறலைச்சொல் குழந்தை யேசுவுக்கே

விண்ணுயரும் ஆசைகொண்டு மகிழம்பூ விழிமேய
மண்ணளந்து நடைபழகி மதமதத்த தென்றலே
எண்ணமெலாம் ஊத்தைகளால் ஆலகாலம் பரவியோடுங்
கண்ணீரின் கதையைச்சொல் குழந்தை யேசுவுக்கே

அஞ்ஞாத வாசநாளில் அடானாவைக் கேட்பவரார்?
எஞ்ஞான்றும் நீயுலவத் தடையுண்டோ தென்றலே
சஞ்சலந்தான் என்னுள்ளந் தனைச்சுடாத நாளில்லை
தஞ்சந்தான் தரவேசொல் குழந்தை யேசுவுக்கே

பூண்டிருக்கும் இதழாடை பசும்பொன்னாய் மலரவிழ்க்கத்
தாண்டிவந்த வண்டைநீயுந் தடுப்பதுமேன் தென்றலே
தூண்டிலிலே மீனாகித் தவித்துநெஞ்சம் உருகிடவே
வேண்டுகிறேன் பேரருள்சொல் குழந்தை யேசுவுக்கே

ஆகாதுன் நடத்தையிது உன்மத்தம் எனும்முகைக்குச்
சாகாதிப் பந்தமென்று சுருசுதிட்டுந் தென்றலே
வேகாது எனக்குள்ளே வஞ்சனையின் கோரவெறி
போகாதே கேட்டுச்சொல் குழந்தை யேசுவுக்கே

குலையாத உறுதியோடு கொண்டுவிட்ட இலட்சியத்தால்
உலையாக மூண்டுதிரச் சேறாடும் இளையவட்டம்
கலைந்தகன வோடிங்கு கதைமுடிக்க நாம்கொடுக்கும்
விலையேது தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

தண்ணீரை மொள்ளவந்த சமாரியாவின் மகளிடமே
புண்ணியனும் நாவுலர்ந்து பெருந்தாகந் தனக்கென்று
கண்ணியமாய்க் கேட்டதுமே அவள்கண்கள் திறந்தகதை
எண்ணுவனோ தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

குற்றமெலாம் மறையவேண்டுந் துன்பத்திற் குளிர்காயாக்
கொற்றமினி வரவேண்டுங் கொடுமைகளை நினையாத
சுற்றமொன்று இங்குவேண்டுந் தென்றலேநாம்
சுதந்திரத்தைப்
பெற்றுயர வேண்டுஞ்சொல் குழந்தை யேசுவுக்கே

கதிர்வீசுங் கதிரவன்போல் அறிவுதய மாகவேண்டும்
எதிர்கால வளங்கொழித்த உலகந்தான் எனக்குவேண்டும்
முதிர்ந்துவிட்ட நீதியோடு சமாதானம் மலரவேண்டும்
புதிர்போட்டுத் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

ஆடாத மயிற்தோகை அழகாலே மயக்கிவிடும்
வாடாத பூப்பொலியும் ஜெத்சமேனி வந்துவெறுங்
கூடாகிக் கலங்குவேள்விச் செம்மறியை என்கண்கள்
தேடாதோ தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே.

பாணமெய்து கடலலையைப் பொன்னிலவு சிறைப்பிடிக்க
நாணத்தால் அல்லிதுயில் நீத்ததைப்பார் தென்றலே
ஆணவந்தால் முடிவுகாணாத் தேடலில்நான் அவதியுற்றேன்
காணுகின்ற வேதனைசொல் குழந்தை யேசுவுக்கே

சித்திரையின் நிலாவழகன் செக்கரிலே முகங்காட்ட
நித்திரைக்கா தவஞ்செய்யும் நல்லாம்பல் தென்றலே
பொத்திவிட்ட வேதனைமுள் புலம்பியழ உறுத்துதிங்கே
தத்திநடை போட்டுச்சொல் குழந்தை யேசுவுக்கே

பறவையொன்று வஞ்சிமலர்ப் பொன்னிதழைத்
தொட்டேங்கச்
சிறகடித்துப் பறந்ததைநீ சாடுவதேன் தென்றலே
கறவையைத்தான் பிரிந்துவாடுங் கன்றுபோல
நான்தவித்தேன்
பிறவாதோ கருணைசொல் குழந்தை யேசுவுக்கே

பாலூட்டி வண்டுக்கு அரவிந்தம் பசிதீர்க்கத்
தாலாட்டுப் பாடியதைத் துயிலவைத்த தென்றலே
வேலாகிக் கொத்துகின்ற வியாகுலந்தான் கொஞ்சமோவுன்
காலாறு முன்னரேசொல் குழந்தை யேசுவுக்கே

உறவாடும் அல்லியிடம் இளையநிலா தோன்றியும்நீ
திறவாயோ இதழ்க்கதவை என்றுகூவுந் தென்றலே
அறிவாயோ துன்பமென்னை அக்கினிபோல் சுட்டகதை
மறவாமல் எடுத்துச்சொல் குழந்தை யேசுவுக்கே

அரும்பாகிச் செவ்வண்டால் அத்திப்பூ முகையவிழுங்
கரும்பான சேதிதந்தாய் கேதார களனியிலே
துரும்புபோல நான்கடலிற் தத்தளித்துத் தென்றலே
வருந்துவதைச் சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

மடைதிறந்த வெள்ளமென மலர்க்காவில் தேன்புரளப்
படைநடத்தும் தலைவன்போல் பவனிவருந் தென்றலே
குடைநிழற்றாப் பாலையாகக் குமுறுகிறேன் சதங்கைகட்டி
நடைநடந்து நீசொல்வாய் குழந்தை யேசுவுக்கே

தும்பிதனைப் பிரிந்தமலர் துயருரைக்கத் தென்றலே
நம்பியிரு பொன்வண்டு நாளைவரும் என்பாயே
வெம்பியழும் பிறர்நெஞ்சை நாக்குவளைத் துப்பேசித்
தெம்பிழக்கச் செய்ததைச்சொல் குழந்தை யேசுவுக்கே

மந்தையெலாங் கள்ளியிடம் மாந்தளிரைத் தேடுகின்ற
விந்தைசூழும் புவிமீது வாழ்வெதற்குத் தென்றலே
சிந்தைமிகக் கலக்கமுறச் சோகவெள்ளம் பொங்குதையோ
தந்தையாக இரங்கிடச்சொல் குழந்தை யேசுவுக்கே

அன்புக்கு ஈடேது அகவல்போற் கருத்தேந்தி
என்புருக்கும் அரசுகட்டில் துறக்கவைக்குந் தென்றலே
இன்றென்ன நாளையென்ன என்றுமன்பு உயிர்வாழுந்
துன்பமில்லை அன்பினாற்சொல் குழந்தை யேசுவுக்கே

பொங்குபுனல் நடுவிலுள்ள பங்கயத்தின் உடலைநுள்ளித்
திங்களுக்கு அல்லியையே தேடிவைத்த தென்றலே
அங்கமெலாம் சுடுநெய்யை ஊற்றியது போல்துடித்தேன்
எங்குசெல்வேன் ஏழைநான்சொல் குழந்தை யேசுவுக்கே

சுற்றிவந்த தும்பியொன்று சங்குவண்ண மல்லிகையின்
நெற்றியிலே முத்தமிட நிலவுக்கேன் பரிகாசம்
சிற்றறிவு தருங்கொடிய சுயநலத்திற் கிடந்தூறி
முற்றியதைத் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

பழுத்தமரந் தனைநாடும் பறவைகள்போல் குவிந்தமுல்லை
மொழுமொழென்ற மொட்டெல்லாந் தளையவிழுந்
தென்றலே
எழுத்தெண்ணிப் படித்தாலும் என்மனமோ திருந்தவில்லை
அழுக்காறை நீக்கச்சொல் குழந்தை யேசுவுக்கே

வெள்ளைமலர் மஞ்சமென மதுகரந்தான் வேட்கையுறத்
தெள்ளமுத இதழ்க்கதவைத் திறந்துவைக்குந் தென்றலே
கள்ளநெஞ்சக் கூண்டினிலே கோடியாக இழிகுணங்கள்
உள்ளதெலாம் சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

அம்புலியைக் கண்டகடல் ஆர்ப்பரிக்கும் பசுங்கிளியின்
செம்பவள வாய்சிந்தும் மருதயாழின் சங்கீதம்
நம்பவைத்து ஏமாற்றி நான்நிமிர்ந்தேன் தென்றலே
தெம்புதர யாருளர்சொல் குழந்தை யேசுவுக்கே

வண்டுதந்த பிரிவாலே வனசமங்கை துடித்துநிற்க
எண்டிசைக்கும் மகரந்த வாசமேனோ நீசொரிந்தாய்
தண்டறுந்த மொட்டுவிழுந் தரையிலன்றோ தென்றலே
கொண்டதுயர் ஓடியேசொல் குழந்தை யேசுவுக்கே.

பூக்குலங்கள் விழிதிறக்கப் பொன்விடியற் திரையினிலே
மாக்கோலம் போட்டுமெல்ல முகங்காட்டுந் தென்றலே
சாக்குருவி ஆந்தைகத்துஞ் செம்மணியில் எழுமவலக்
கூக்குரலைப் போய்ச்சொல்லேன் குழந்தை யேசுவுக்கே

குடந்தேனை மலர்சொரியக் கொடியசைக்குந் தென்றலே
தடங்கிழித்த ஆசைகளைத் தீயெரிக்க உயிர்மூச்சு
அடங்கிவிட்ட சொந்தங்கள் உறங்குகின்ற செம்மணியின்
கிடங்கெழுதுஞ் சரிதஞ்சொல் குழந்தை யேசுவுக்கே

வந்துவிடு வைகறையே என்றேங்கித் தவிப்போர்க்குத்
தந்துவிடச் சுகந்தேடி அலைவதெங்கே தென்றலே
குந்தியெழ இடமுமின்றிக் கொடும்பசியில் வாடுமிடர்
எந்தநாளில் தீருமோசொல் குழந்தை யேசுவுக்கே

இம்மியள வாகிலுமே நெஞ்சத்தில் ஈரமின்றி
நம்மவரின் கனவுகளை நசித்தெறிந்த ஓநாய்கள்
செம்மணியை மேய்ந்தவடு சொல்லுமந்த உறவுகளின்
விம்மலொலி தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

மண்மகளும் உறங்கியுமுன் மனமுயிர்க்கும் வைகறையில்
கண்தூங்கும் அல்லிதேடிக் கைதழுவுந் தென்றலே
வெண்பஞ்சு பெருந்தீயில் வீழ்ந்துவிட்ட கதைகண்டிப்
பெண்ணுக்கு அருள்தரச்சொல் குழந்தை யேசுவுக்கே

ஏணிகட்டி அடிவான உப்பரிகை மீதுருண்டு
மாணிக்கச் செண்பகத்தில் மெத்தைபோடுந் தென்றலே
நாணியுடல் பதறுகையோ நான்வாழ்ந்த வாழ்வெண்ணிப்
பேணியெனைக் காக்கச்சொல் குழந்தை யேசுவுக்கே

விசையொடிந்த நாரைக்கு வசந்தகால மகரயாழின்
இசையமுதால் வலிமைதரும் இனியதமிழ்த் தென்றலே
திசையேதும் அறியாமற் தடுமாறுங் கலம்போல்நான்
வசைபட்டுத் துடிப்பதைச்சொல் குழந்தை யேசுவுக்கே

ஓடுங்கள் பொன்நதிகாள் உருண்டுருண்டு திமிதையென்று
ஆடுங்கள் மயிலினமே ஆனந்த வீணைமீட்டிப்
பாடுங்கள் மாங்குயில்காள் புகழ்ந்திதனைத் தென்றலே
தேடியவர் காதிற்சொல் குழந்தை யேசுவுக்கே

பச்சைவண்ணக் கொடிகளிலே பொன்னூஞ்சல் கட்டியாடி
இச்சைமீறி மலர்தாவ எங்குமிளந் தென்றலே
அச்சாணி யில்லாத வண்டிபோல வீழ்ந்தன்புப்
பிச்சைக்கு வந்ததைச்சொல் குழந்தை யேசுவுக்கே

புல்நுனிமேற் தொத்திநிற்கும் பனியைநீவி நெஞ்சைப்பூ
மெல்லிடையில் செருகிவிட்ட மோகனப்பூந் தென்றலே
தொல்லுலகின் சூறையிலே துரும்பெனவே நானலைந்தேன்
நில்லாமல் விரைந்தேசொல் குழந்தை யேசுவுக்கே

மூசியெழும் பெருங்காளம் போல்முழங்க ஜெருசலேமில்
ஓசன்னாப் புகழ்மணந்து ஊரெங்கும் கேட்டதம்மா!
மாசணுகா மனுவேலன் பேர்சொல்லித் தென்றலே
பூசித்தேன் என்றேசொல் குழந்தை யேசுவுக்கே

முதிர்ந்தமலைச் செந்தேனை முல்லையிலே தான்பெய்து
சதிராடும் அருவிமாதின் சீர்வரிசை சுமந்தனையோ
விதியென்ற மாயவலை வீழ்ந்துவிட்டேன் தென்றலே
எதிர்கொள்ளத் துணைதரச்சொல் குழந்தை யேசுவுக்கே

ஆற்றினிலே பூப்படுக்கை போட்டந்தி சாயவயல்
நாற்றினூடே காலெடுத்து நடந்துசெல்லுந் தென்றலே
வீற்றிருப்பேன் புதுவாழ்வில் வளங்கொஞ்ச என்றிருந்து
தோற்றுவிட்ட சோகஞ்சொல் குழந்தை யேசுவுக்கே

வீட்டிலொளி தரும்நந்தா விளக்கினைப்போல் எந்தவொரு
நாட்டினிலும் உனக்கில்லை நிறபேதந் தென்றலே
கூட்டினுள்ளே சிறைப்பட்ட கிளியாகி நான்துடித்தேன்
வாட்டுமிந்தத் துயரைச்சொல் குழந்தை யேசுவுக்கே

வாக்குடனே நற்பொருளை வடித்தெடுக்குந் தமிழ்க்கவிஞன்
நாக்கைப்போன் மனத்தைத்தான் நாடுபோற்றுந்
தென்றலே
தேக்குமரங் காட்டினுள்ளே தீயாலே எரிந்ததைக்கண்
நோக்கியேதான் சென்றுசொல்லேன் குழந்தை யேசுவுக்கே

மலையோடு நெஞ்சிறுக்கி மஞ்சுருளப் பொங்குகடல்
அலையோடு முத்துருள அழகுபார்க்குந் தென்றலே
வலைப்பட்ட புறாப்போல வீழ்ந்துவிட்ட நானழாமற்
தலையெடுக்க வழிதரச்சொல் குழந்தை யேசுவுக்கே.

மஞ்சளுடன் சந்தனமும் மாதுளையின் செந்தளிரும்
பிஞ்சுமலர் நறுமிதழும் பொன்மேனி தேய்த்தழகு
கொஞ்சவைத்துக் குளிரநெஞ்சம் விழைவதுமேன் தென்றலே
கெஞ்சுகிறேன் இனிவரச்சொல் குழந்தை யேசுவுக்கே

நந்தவனஞ் சுற்றிநாட்டைக் குறிஞ்சியிலே தமிழ்குழைத்துச்
சிந்துபாடி மலர்களோடு சரசமாடுந் தென்றலே
தந்தைதூய ஆவிகண்ட தங்கமகன் அருகிலோடி
நொந்தழுமென் துன்பஞ்சொல் குழந்தை யேசுவுக்கே

சோலையில்நீ புரண்டுவர சந்தனத்திற் குளித்தெழுந்த
மாலைநிலா அல்லிக்கு ஏகாந்த மதுவூற்றும்
பாலைமண்ணில் வேர்விட்டுப் பாறையூடே
மலர்ந்துவிட்டேன்
ஓலையிதோ தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

குமுதமலர் வதனத்தாள் கால்வலிக்க வெண்ணிலவும்
அமுதமூறும் பார்வையாலே அன்புபொங்கித் தழுவவரும்
எமன்போலுங் கொடுந்துயரப் பேராழி எனைமூடும்
சுமைதானோ தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

மையெழுதிச் செவ்வந்தி மடந்தையவள் முறுவலிக்க
மெய்தழுவிக் கையணைப்பில் மயங்குதிங்கே வண்டொன்று
பொய்யோடு மனக்குள்ளம் புரையோடிக் கிடப்பவளைக்
கைதூக்கத் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

கலாபமயில் மேகத்தைக் கண்டுவிட்டாற் கூத்தாடுங்
குலாவிமுகஞ் சிவந்தாலே கருங்குவளை ஊஞ்சலாடும்
உலாவுகின்ற தென்றலேயென் உள்ளந்தான் தவிக்குதையோ
நிலாவறியும் முன்னேசொல் குழந்தை யேசுவுக்கே

மூசுகின்ற கடற்தாயின் மடிமீது புரண்டுநீயும்
வீசுகின்ற இனிமையிலே வண்ணறோசா முகஞ்சிவக்கும்
யேசுவெனுந் திருப்பேர்தான் எனக்கின்பந் தென்றலே
பேசுமிதைக் கேட்டுச்சொல் குழந்தை யேசுவுக்கே

பட்டாலும் அன்புமீறிப் பக்கத்தில் நின்றாலுஞ்
சுட்டாலும் உன்னாலே சுகங்கோடி தென்றலே
கட்டான உடல்தளர்ந்து கடுந்துன்பம் நானடைந்தேன்
தட்டாது கண்டுசொல்வாய் குழந்தை யேசுவுக்கே

தீக்குள்ளே விரல்வைத்துத் தடாகத்துச் சுகமறிவார்
சாக்கடையிற் புழுக்கள்போற் சமுதாயத் தெருவிலேறி
மூக்குடைந்து போகின்றார் முடிவணங்கித் தென்றலே
பூக்களேந்திப் போய்ச்சொல்லேன் குழந்தை யேசுவுக்கே

சோற்றுக்கு அலைவோர்கள் சிரிக்கவுமோர் நாள்வருமா?
நூற்றுக்கு ஒருவரேனும் நேர்மைவழி செல்வாரா?
சேற்றினையே இங்குவாரிச் சந்தனம்போற் பூசுகின்றார்
ஆற்றலாமோ தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

சுழலுகின்ற கடலினிலே சிறுதுரும்பாய் அலைந்துமனங்
கிழிந்துநோகப் புலருகின்ற பொழுதுகண்டு துடித்தெழுந்தும்
விழிகளைநீர் கழுவியோடச் சந்நிதிக்கு வரவாசல்
வழியறியேன் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

வில்லேந்தித் தடியோடு வேட்டையாடும் யுகமதிலும்
சொல்லெடுத்து அளவிடத்தான் முடியாத சமாதானம்
நல்லதொரு நீதிநெறி வாழ்ந்தவனும் பாதைமாறிச்
செல்லுவதைத் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

கந்தலைப்பொன் ஆடையென்றுங் கள்ளியைத்தேன் முல்லையென்றுஞ்
சிந்திவிழும் பொறியைச்செங் கதிரென்றுந் தெளிவான
சொந்தமூளை இல்லானைச் செம்மலென்றுந் தென்றலே
வந்தித்த பேதமைசொல் குழந்தை யேசுவுக்கே

ஆறின்றி ஊருக்கு அழகில்லைக் காலமுந்துஞ்
சேறின்றித் தாமரைக்குச் சுகமில்லைத் தென்றலே
நீறுபூத்த துயராலே நெஞ்சழிந்த எனக்குவழி
வேறில்லை என்றுநீசொல் குழந்தை யேசுவுக்கே

பாம்புதானுந் தேரைதனைப் பிடித்துன்ன மறந்தாலும்
வீம்பளக்கும் புல்லுருவி முகப்பூச்சே விலைபோகுங்
காம்பறுந்த பூவாகக் கண்ணீரில் நீந்திவாடித்
தேம்புகின்றேன் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

வெற்பிடிந்து தூளாக மின்னிவானம் இடிகக்கக்
கற்பிழந்த மனிதம்போற் கருத்தழிந்தோர் விழிதிறக்கத்
தற்பரனாய்ச் சாவைவென்றார் தாரணியிற் தென்றலே
உற்றதுணை காணேன்சொல் குழந்தை யேசுவுக்கே

குன்றுதருந் தேனருவி குடங்குடமாய் நீரூற்ற
நின்றிருந்த ஓடைமலர் நாணலைப்போற் தள்ளாடும்
அன்றிருந்த என்மகிழ்வு கானல்நீர் தென்றலே
சென்றுடனே சொல்லியேவா குழந்தை யேசுவுக்கே

தேன்கரும்பும் இனிமையினைத் தமிழிடமே பிச்சைகேட்கும்
வான்மதியும் பாலொளியை மங்கையிடம் கடன்வாங்கும்
மான்குலத்தில் மலர்ந்தநானும் ஆரிடத்தில் எதையிரக்க
ஏன்தயக்கந் தென்றலேசொல் குழந்தை யேசுவுக்கே

அந்திவர முன்னுரைபோல் ஆலயத்தின் மணிகேட்குஞ்
சந்தியிராப் பூக்களுக்குச் சாமரமே வீசிநிற்பாய்
சிந்திநானும் புகைபடிந்த சித்திரந்தான் தென்றலே
முந்திநடந் துண்மையைச்சொல் குழந்தை யேசுவுக்கே

மோனத்தை அறியாத முனிவனுக்குத் தவமில்லை
வானத்தை நிலாபகைத்தால் விளையாட மடியில்லை
மானத்தை விற்பவனோ மனிதனில்லைத் தென்றலே
ஞானத்தை அருளச்சொல் குழந்தை யேசுவுக்கே

மக்களினம் நாவாலே மாலையிட்டுப் புகழ்ந்துநின்றால்
திக்கறியாப் போதையென்னிற் தலைக்கேறுந் தென்றலே
சக்கரம்போல் சுகதுக்கஞ் சுழன்றுவரும் உலகினிலே
தக்கவழி காட்டச்சொல் குழந்தை யேசுவுக்கே

பாலிருக்குந் தளிர்முகத்தில் பொன்னுடலோ மாலைவெயில்
போலிருக்கும் அவர்விழியில் அருள்பொங்குந் தென்றலே
தோலிருக்கச் சுளைவாங்குந் தாரணியிற் பேதைநெஞ்சம்
மேலிருக்குஞ் சுமையைச்சொல் குழந்தை யேசுவுக்கே

சூதொன்றும் அறியாத சிறுகுழவி மழலையிலே
ஏதேதோ பிதற்றிவிட்டேன் ஆணவத்திற் தென்றலே
வேதத்தின் அருள்வடியை மூளிமனப் பிழைபொறுத்துப்
பாதமலர் தரவேசொல் குழந்தை யேசுவுக்கே

நீரிழந்த பயிரினையும் நாதியில்லா ஏழையையுஞ்
சீரோடு வாழவைக்கும் யேசுபாலா பூங்கவிதைத்
தேரேறி வருமெந்தன் தென்றலோதுந் தூதைவாழ்த்திப்
பேரருளைச் சொரிந்தெளிய பிறவியெனை ஆளுமையா!

முற்றும்

# கலைஞர் மு. சிங்கராயர்



யாழ். பாஷையூர் தந்த கலைஞர் மு. சிங்கராயர் (1938) வித்துவான் ச. சி. ஞானப்பிரகாசம், பண்டிதர் செ. செல்வரத்தினம் ஆகியோரிடம் முறையாகத் தமிழ் பயின்றவர். ஆசிரியராகவும், உப அதிபராகவும் கல்வித் தொண்டாற்றி 1994 இல் இளைப்பாறியவர்.

இருபது வயதிலேயே இலக்கியத் துறையில் கால்வைத்த இவர் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், கூத்து ஆகிய துறைகள் அனைத்திலும் தடம்பதித்தவர், ஈழத்தில் வெளிவரும் எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதி வந்தவர்; வருபவர்.

இவரின் 'காவலனின் காதலி' எனும் நாடகம் மன்றங்களிடையே நடைபெற்ற போட்டியில் இலங்கை வானொலியில் முதற்பரிசு பெற்றது. பல கவிதைப் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுத் தன்னை ஒரு கவிஞராக நிலைநாட்டியவர். கூத்துப்பாடல்கள் இயற்றுவதிலும் புலமை மிக்கவர்.

இவருடைய கவித்துவத்தைப் பாராட்டி யாழ். மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை அவர்கள் பரிசு வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது இவருடைய நாடகம் மேடையேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல நாடகங்கள் அரங்கேறின. 'பாஷையூர் நாட்டுக்கூத்து வளர்ச்சிக் கழகம்', 'பாஷையூர் தேனருவி நாடகமன்றம்' ஆகிய மன்றங்களை நிறுவிக் கலைப் பணியாற்றியவர்.

'பாசையூரானைப் பாடு' எனும் கவிதை நூலை 1992 இல் வெளியிட்ட இவர் இப்பொழுது 'தூது போ தென்றலே' எனும் கவிதை நூலை வெளியிடுகின்றார்.

கலைஞர் மு. சிங்கராயர் தமிழ்ப்பற்றும் இனப்பற்றும் இறைப் பற்றும் மிக்கவர்; பழகுதற்கு நல்லவர், இனிய பண்பாளர்.

**கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை.**

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம். — 2000